வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்--மலர்விழி

தேதி 6.2.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

கற்றல் முறைகள் ஒருவருக்கொருவர் வேறுபடும் என்பதால் மாணவர்கள் தங்களின் சொந்தக் கற்றல் முறையை நம்ப வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவையில் இன்று எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, அலுவல்கள், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள, பணக் கொள்கையில், ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல், 5.25 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், கதிர்காமம் இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், 11 புதிய, அறுவை சிகிச்சைக் கூடங்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

மோடி-பரிஷா-பே சர்ச்சா

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று9-ஆம்ஆண்டு பரிஷா-பே-சர்ச்சா நிகழ்ச்சியில் தேர்வு பயத்தைப் போக்குவது குறித்து மாணவர்களுடன்

கலந்துரையாடினார். கற்றல் முறைகள் ஒருவருக்கொருவர் வேறுபடும் என்பதால் மாணவர்கள் தங்களின் சொந்தக் கற்றல் முறையை நம்ப வேண்டும் என்றார். அதேசமயம் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் அறிவுரைகளை செவிமடுக்கவும் தவறக் கூடாது என்று அவர் வலியுறுத்தினார். ஆயினும் மற்றவர்களை அப்படியே நகல் எடுப்பதைத் தவிர்த்து எதையும் தங்கள் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் ஆலோசனை வழங்கினார்.

ஆசிரியர்கள், தனிப்பட்ட மாணவர்களின் கற்றல் வேகத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார். கற்பித்தல் என்பது வேளாண்மைக்கு ஒப்பானது என்றும், விவசாயிகள், விதைக்கும் முன்னர் நிலத்தை பண்படுத்துவது போல, ஆசிரியர்கள் மாணவர்களின் மனதை பொறுமையுடன் பண்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களில் ஒருவர், **திறமை முக்கியமா மதிப்பெண் முக்கியமா** என்று கேட்டதற்கு, **இரண்டுக்கும் இடையில் சமநிலை தான் முக்கயம்** என்று பிரதமர் பதில் அளித்தார். வாழ்க்கைக்கு வடிவம் கொடுப்பது கல்வி தான் என்பதையும், கற்ற கல்வியின் சோதனை மட்டுமே தேர்வு என்பதையும் மாணவர்கள் புரிந்து கொண்டு, முழுமையான **வாழ்க்கை முன்னேற்றத்திற்கு** முக்கியத் துவம் அளிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். உடல்-மனம் ஆகிய இரண்டின்

ஒருங்கிணைந்த வளர்ச்சி தான், முழுமையான வளர்ச்சி என்பதால் மாணவர்கள் படிப்புடன் நல்ல உணவு, போதிய ஓய்வு, உடற்பயிற்சி, மற்றும் யோகாவிலும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

இவ்வாண்டு **பரிஷா-பே சர்ச்சா** நிகழ்ச்சியின் கீழ், தேவமொக்ரா, ராய்பூர், குவஹாத்தி, கோவை ஆகிய இடங்களிலும்,டெல்லியில் உள்ள பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லத்திலும், **தேர்வு வீரர்கள் உடனான** அமர்வுகள் நடைபெற்றன. நாடெங்கிலும் இருந்து சுமார் நாலரை கோடி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், **மை-கவ்** இணைய தளம் மூலம் இதில் பங்கேற்கப் பதிவு பெற்று இருந்தனர்.

*நிகழ்ச்சி- புதுச்சேரி*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் **பரிஷா-பே-சர்ச்சா** நிகழ்ச்சி, புதுச்சேரி கம்பன் கலையரங்கில், உள்ளூர் மாணவர்களுக்கு திரையிடப்பட்டது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இதில் கலந்து கொண்டு, இவ்வாண்டு பிரதமர் உடனான கலந்துரையாடலில் பங்கேற்ற, **கலிதீர்த்தாள் குப்பம் அரசுப் பள்ளி மாணவி கீர்த்தனாவை**, பாராட்டி கவுரவித்தார். **கடந்த ஆண்டு** நிகழ்ச்சியில் பங்கேற்ற **காரைக்கால் மாணவி கீர்த்தனா சங்கரையும்**, அவர் பாராட்டினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம்,

மற்றும் கல்வித் துறை அதிகாரிகள், கம்பன் கலையரங்கம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், மாணவர்கள், நேர்முக சிந்தனையுடன், சரியான முறையில் தேர்வுகளுக்கு தயாராக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். துணை நிலை ஆளுநர் உரையில் இருந்து ஒரு பகுதி.............

**(வாய்ஸ்-கைலாஷ்நாதன்)**

*மக்களவை-ஒத்தி வைப்பு*

மக்களவையில் இன்று எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, அலுவல்கள் முதலில் ஒருமுறையும், நண்பகல் 12 மணிக்கு மேல் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. இதனால் மத்திய பட்ஜெட் மீதான விவாதங்களை, திட்டமிட்டபடி இன்றைய தினம் மேற்கொள்ள இயலவில்லை. எதிர்கட்சிகள் வேண்டுமென்றே அலுவல்களை தடைப் படுத்துவதாக, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா அவையில் குற்றம் சாட்டினார்.

*மாநிலங்களவை-ரயில்வே*

கடந்த 2024-ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் ரயில்வே துறை, 5 லட்சத்து 4 ஆயிரம் வேலை வாய்ப்புகளை வழங்கி இருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார். நரேந்திர

மோடி அரசின் 3-ஆவது பதவிக் காலத்தில், ரயில்வே துறையில் இதுவரை சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் இன்று மாநிலங்களவையில், கேள்வி நேரத்தின் போது கூறினார். முன்பு ஆண்டுக்கு 37 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த, ரயில்வே துறையின் எரிசக்திச் செலவுகள் தற்போது 32 ஆயிரம் கோடி ரூபாயாக குறைந்து இருப்பதாகவும், 170 ரயில் நிலையங்கள், **அமிர்த பாரத் நிலையங்களாக** மறுமேம்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*ரிசர்வ் வங்கி*

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள, நடப்பு நிதியாண்டின் கடைசி 2 மாதங்களுக்கான பணக் கொள்கையில், ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல், ஏற்கனவே உள்ள அதே அளவில், 5.25 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. பணக் கொள்கை குறித்து கூடுதல் விவரங்கள்........

**(வாய்ஸ்)**

வரவிருக்கும் நிதியாண்டின் முதல் 2 காலாண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றிய ரிசர்வ் வங்கியின் கணிப்பு, முறையே, 6.9 மற்றும், 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதே கால கட்டங்களில், **சில்லரை விலைப் பணவீக்கம்** பற்றிய கணிப்பும், முறையே 4 மற்றும் 4.2

சதவிகிதமாக திருத்தி அறிவிக்கப் பட்டுள்ளது. இது, பணவீக்கம் பற்றிய முந்தைய கணிப்புகளை விட சற்று அதிகம் என்றாலும், **தங்கம்-வெள்ளி விலை உயர்வே** இதற்கு காரணம் என்று, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். குறைந்த மதிப்பில் ஆன்-லைன் மோசடிகளால் பாதிக்கப்படும் நுகர்வோருக்கு **25 ஆயிரம் ரூபாய் வரை இழப்பீடு** வழங்கும் வகையில், புதிய கட்டமைப்பு ஒன்றை உருவாக்க ரிசர்வ் வங்கி திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக, மூத்த குடிமக்களின் ஆன்-லைன் பரிவர்த்தனைகளுக்கு **கூடுதல் அங்கீகாரம்** கோருவது குறித்து **ஆலோசனை ஆவணம்** ஒன்றை ரிசர்வ் வங்கி வெளியிடும் என்றும் அவர் கூறினார். காப்பீடு உள்ளிட்ட திட்டங்களை, தவறான தகவல்களின் அடிப்படையில் நுகர்வோருக்கு விற்பதை தடுக்கவும், ஏஜன்டுகள் மூலமான கடன் வசூல் கெடுபிடிகளைக் கட்டுப்படுத்தவும் வரைவு விதிமுறைகள் வெளியிடப்படும் என ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

*புதுச்சேரி-கதிர்காமம்*

புதுச்சேரியில் கதிர்காமம் **இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில்**, மொத்தம் 28.92 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள, 11 நவீன **அறுவை சிகிச்சைக் கூடங்களை**, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று திறந்து வைத்தார். குளிர்சாதனம், தீ எச்சரிக்கை,

மருத்துவ தேவைகளுக்கான வாயுக் குழாய்க் கட்டமைப்பு உட்பட, NABH தரச் சான்றிதழ் பெறுவதற்கேற்ற எல்லா வசதிகளும், இந்த அறுவை சிகிச்சைக் கூடங்களில் இடம் பெற்றுள்ளன. மக்களுக்கான சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும், நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு காத்திருக்கும் காலத்தை குறைக்கவும் இதனால் ஏதுவாகும்.

*புதுச்சேரி-பூமி பூஜை*

புதுச்சேரியில் ராஜ்பவன் தொகுதிக்கு உட்பட்ட, இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் முதுகலை படிப்பு நிறுவனத்தில், 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கட்டமைப்பு இயக்கத்தின் நிதி ஆதரவுடன், பொதுப் பணித் துறை மூலம், 11.93 கோடி ரூபாய் மதிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நிகழ்ச்சியில், சுகாதாரத் துறை செயலர் திரு சவுத்ரி முகமது யாசின், துறை இயக்குநர் டாக்டர் செல்வேள், பொதுப் பணித் துறை தலைமை பொறியாளர் திரு வீர செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-காலியிடம்*

புதுச்சேரி அரசின் உணவுப் பாதுகாப்புத் துறையில், ஒப்பந்த அடிப்படையிலான உணவு பாதுகாப்பு அதிகாரி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பணி

ஆணை வழங்கினார். துறையின் தலைவர் டாக்டர் ரமேஷ், உள்ளிட்டோர் உடன் இருந்தனர். இதுதொடர்பாக, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்துடன் ஏற்கனவே எட்டப்பட்டுள்ள உடன்பாட்டின் படி, புதிய உணவு பாதுகாப்பு அதிகாரிகளின் 8 மாத ஊதியத்திற்கான செலவை ஆணையமும், 3 மாத கால ஊதியச் செலவை புதுச்சேரி அரசும் பகிர்ந்து கொள்ளும் என அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*காரைக்கால் பட்டியல்*

காரைக்கால் மாவட்டத்தில், அரசுச் செயலரும், வாக்காளர் பட்டியல் பார்வையாளருமான திரு விக்ராந்த் ராஜா இன்று கள ஆய்வுகளில் ஈடுபட்டனர். பல்வேறு வாக்காளர்களின் வீடுகளுக்கே அவர் நேரில் சென்று விவரங்கள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் ஆராய்ந்தார். தரவுகளின் துல்லியத் தன்மை மற்றும் புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, வாக்குச் சாவடி நிலை அதிகாரிகள், மற்றும், துணை வாக்காளர் பதிவு அதிகாரிகளுடன் அவர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

*வானிலை*

இன்று தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும் நாளை முதல் வரும் 10-ஆம் தேதி வரை, தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்

என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, சேலம்,ஈரோடு, தர்மபுரி,கிருஷ்ணகிரி, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனி மூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் காரைக்கால் மற்றும் நெல்லை மாவட்டம் நாலுமுக்கு உள்ளிட்ட இடங்களில், தலா 1 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. குறைந்த பட்ச வெப்பநிலையாக கொடைக்கானலில், 5.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று ஹராரே-யில் நடைபெறும் இறுதிப் போட்டியில், இந்திய அணியால் நிர்ணயிக்கப்பட்ட, 412 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி, 2-ஆவதாக ஆடும் இங்கிலாந்து அணி, சற்று முன் வரை, --------- ஓவர்களில், -------- விக்கெட் இழப்பிற்கு, ----- ரன் எடுத்து இருந்தது. முன்னதாக, டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில், 9 விக்கெட் இழப்பிற்கு, 411 ரன் எடுத்தது.

*அமித் ஷா*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, தமது 2 நாள் ஜம்மு-காஷ்மீர் பயணத்தின் முதல் கட்டமாக இன்று, கத்துவா மாவட்டத்தில்

முன்னணி எல்லைப்புற பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். ஊடுறுவல் முயற்சிகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்து, எல்லைப் பாதுகாப்பு படையினருக்கான பல்வேறு நலத் திட்டங்களையும் தொடக்கி வைத்தார். பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் இன்று ஜம்மு-லோக்பவனில், விரிவான உயர்நிலை மறுஆய்வுக் கூட்டம் ஒன்றையும் நடத்துகிறார். நாளை ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சி குறித்து மற்றொரு உயர்நிலைக் கூட்டத்திற்கும் அவர் தலைமை ஏற்கிறார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கற்றல் முறைகள் ஒருவருக்கொருவர் வேறுபடும் என்பதால் மாணவர்கள் தங்களின் சொந்தக் கற்றல் முறையை நம்ப வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவையில் இன்று எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, அலுவல்கள், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள, பணக் கொள்கையில், ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல், 5.25 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், கதிர்காமம் இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், 11 புதிய, அறுவை சிகிச்சைக் கூடங்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/6.2.2026/Script/

----------------------------------